**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**

**M.C.O.P No. 30/2021**

**2024ம் ஆண்டு ஜனவரி மாதம் 19-ஆம் தேதி வெள்ளிக்கிழமை**

எ.ம.சா.1 சாட்சியின் வாக்குமூலம் பிரமாணச்சட்டம் 1969, பிரிவு 6(1)ன்படி இளநிலை உதவியாளர் திரு. இளங்கோவன் என்பவரால் உறுதிப்பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | விஜயராஜ் | த.பெ |
| கிராமம் | | வட்டம் |
| சாதி | | சமயம் |
| வயது | | தொழில் |

**முதல்விசாரணை:-**

நான் இந்த மனுவின் எதிர்மனுதாரரான தமிழ்நாடு அரசு போக்குவரத்து துறையில் ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். எதிர்மனுதாரா் தரப்பு முதல் சாட்சி ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். என்னுடைய தகவலின் பேரில் தான் தயாரிக்கப்பட்டது. அதில் உள்ள விபரங்களை தெரிந்து கொண்டு கையெழுத்திட்டேன். எனது தரப்பில் ஆவணங்கள் எதுவும் தாக்கல் இல்லை.

**குறுக்கு விசாரணை(மனதார் தரப்பில்)**

விபத்து சம்பந்தமாக என் மீது தான் முதல் தகவல் அறிக்கை, குற்ற அறிக்கை பதிவுசெய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். விபத்து சம்பந்தமாக எங்கள் அலுவலகத்தில் தனியாக விசாரணை நடைபெறுமா என்றால் சரிதான், அவ்வாறு விசாரணை நடைபெற்றது. மேற்படி விசாரணையில் எனது தவறால் தான் விபத்து நடந்ததாக முடிவு வந்துள்ளது என்றால் சரிதான். நான் தான் பேருந்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாக பேருந்தை ஓட்டி விபத்தை ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல. விபத்தில் காயமடைந்த நபா் ஒரு வாகனத்தை முந்தி செல்ல முயன்ற போது விபத்து நடந்ததாக எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் அந்த வாகனம்இருசக்கர வாகனமா அல்லது நான்கு சக்கர வாகனமா என்றும் அதன் பதிவெண்ணையும் எனது நிரூபண வாக்குமூலத்தில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். காயம்ப்பட்ட நபா் சாலையின் அவருக்கு இடதுபுறமாக மெதுவாக

சென்றுகொண்டிருந்தார் என்றும் நான் தான் கவனகுறைவாகவும் அதிவேகமாகவும் ஓட்டி சென்று விபத்து ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல. எங்கள் நிறுவனம் நஸ்ட ஈடு கொடுப்பதிலிருந்து தவிர்ப்பதற்காக பொய்யான தகவலுடன் நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எங்கள் நிறுவனம் தான் நஸ்ட ஈடு வழங்கவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது**

**சார்பு நீதிபதி**
**மானாமதுரை**